(2) அமைச்சர்களின் விளக்க உரைகள்—தொடர்ச்சி

(இ) கால் நடை உதவியாளர்கள் தலைமைச் செயலகத்திற்கு முன் தொடங்க இருக்கும் உண்ணாவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கையை அவைக்குச் சமர்ப்பிப்பார்கள்.

*** மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அரசு, கால் நடை உதவியாளர்கள் தங்களுக்குச் சில கோரிக்கைகள் இருப்பதாக சுவரொட்டிகளும், துண்டறிக்கைகளும் வெளியிட்டு, 'அறப்போர்' நடத்தப் போவதாகவும், தலைமைச் செயலகத்துக்கு முன்பு உண்ணாவிரதம் மேற்கொள்ள 16—3—1970 என்று நாள் நிர்ணயித்திருப்பதாகவும் செய்திகள் வெளியிட்டனர். அவர்கள் கோரிக்கைகள் எதுவாயினும், அவைபற்றி என்னிடம் நேரில் சந்தித்துப் பேசலாமென்றும், இதுவரையில் அவர்களில் யாரும் என்னை சந்தித்து எந்தவிதக் கோரிக்கை முறையீடுகளையும் தரவில்லை யென்றும் இப்போதாவது என்னைச் சந்திக்க அவர்கள் வரட்டும் என்றும் நேற்று 15—3—1970 அன்று அவர்களுக்குச் சொல்லியனுப்பினேன். அவர்கள் யாரும் வரவில்லை. இன்று 16—3—1970 காலையிலும் அவர்கள் உண்ணாவிரதம் தொடங்குவதற்கு முன்பு என்னை வந்து சந்திக்கலாம் என்று சொல்லியனுப்பினேன். அவர்கள் அந்த அழைப்பையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் பிரச்சினைகள், குறைபாடுகள் பற்றி என்னிடம் எதுவும் கலந்து பேசாமலும், அல்லது அவர்கள் கோட்டை முன்பு உண்ணாவிரதம் தொடங்குவது பற்றிக் கூட முன்கூட்டி என்னிடம் அறிவிக்காமலும் திடீரென இந்த 'அறப்போரில்' இறங்கியிருப்பது வருந்தத் தக்கதாகும். பகல் 2—0

அவர்கள் பிரச்சினையை எடுத்துவைக்கிற வாய்ப்பை அவர்களும் ஏற்படுத்திக் கொள்ளாமல், அதுபற்றி அவர்களோடு விவாதிக்க எனக்கும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்க விரும்பாமல், வேண்டுமென்றே இப்படிப் பட்ட தேவையற்ற கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளார்கள். வெளியூர்களில் உள்ள அரசு கால் நடை உதவி அலுவலாளர்களும் இதற்கென சென்னைக்கு வந்துள்ளார்கள்.

பிரச்சினைகளை அரசு அனுதாபத்துடன் கவனிப்பது என்பது வேறு, அரசு அலுவலாளர்கள் இது போன்ற காரியங்களில் ஈடுபடுவது, அரசின் விதிகளின் படி சரிதானா என்று ஆராய்ந்து அதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பது என்பது வேறு. பிரச்சினைகளில் அனுதாபங்காட்டவும், விதிமுறைகளை மீறும் போது நடவடிக்கை எடுக்கவும் இந்த அரசு சிறிதும் தயங்காது.

இந்த விளக்கத்தை மட்டும் அவைக்கு அறிவிப்பதை என் கடமையாகக் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் நிகழ்ச்சி இன்று இந்த அளவோடு முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.